கள். அரசாங்கமே சென்னை போன்ற பெரிய நகரங்களில் மருந்துக் கடைகளைத் திறந்து வைத்து எசென்சியல் ட்ரக்ஸ் கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்ய முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மேலும் தனியார் மருந்து நிலையங்களைத் திறந்து வைக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்துவதுதான். அதற்கு ஒருமித்த ஆதாவு பெறுவதுதான் நல்லது என்பது என் எண்ணம். சென்னை போன்ற நகரங்களில் ஒரே ஒரு இடத்தில் மட்டும் வைக்கப்படுமானால் பரந்த சென்னை நகரத்தில் எல்லா இடங்களிலும் உடனுக்குடன் மருந்து பெற போதுமான உதவியாக அது இருக்காது. ஒவ்வொரு பகுதியிலும் ஒரு கடையாவது திறந்து வைக்க தனியார்களை ஊக்கப்படுத்துவது மூலம் செயற்படுத்த முயற்சிக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது.

திருப்புவனம் ஒன்றியத்தில் குடிநீர் வழங்கு திட்டங்கள்

*** 605 வினா—திரு. த. சோனையா :** மாண்புமிகு மக்கள் நல் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், அம்பலத்தாடி அரிசனங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்குவதற்கு அரசிடம் ஏதேனும் திட்டம் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) கிராமக்குடிநீர் வழங்கும் விரைவுச் செயல்முறைத் (Accelerated Programme) திட்டத்தின் கீழ் இதுகாறும் 3,545 திட்டங்கள் 13 தொகுப்புகளாகத் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளன. 14-வது தொகுப்பு தயாரித்து முடிக்கப் பெறும் நிலையில் உள்ளது. விரைவில் அதுவும் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பெறும். அடுத்த 15-வது தொகுப்பில் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த அம்பலத்தாடி கிராமத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ரூ. 44,000-க்கான திட்டமதிப்பீடு ஒன்றும் சேர்க்கப்பட்டிருக்கிறது. அந்த மதிப்பீடு ஏற்றுக்கொள்ளப்படுமானால் ஒரு ஆழ்துளைக் கிணறு தோண்டி,

1973 டிசம்பர் 4]

அதன் மீது மின்விசைப் பம்பு பொருத்தி நீரேற்று குழாய்கள் மூலமாகத் தண்ணீரைக் கிராமத்தின் நடுவே அமைக்கப்படவிருக்கும் நீர்த்தேக்கத் தொட்டிக்கும் கொண்டு வந்து, கிராமத்தின் மக்கட்தொகையான 450 பேருக்கும் குடிநீர் வழங்கச் செய்ய இத் திட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் அனுமதியும் பொருளுதவியும் கிடைத்தவுடன் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

*606 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கணக்கங்குடி, ஏனாதி தேளி அரிசனங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான செயற் குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இராமநாதபுரம் மாவட்டம் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கணக்கங்குடி, ஏனாதி, தேளி ஆகிய கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் அனுமதிக்கு அனுப்பப்படவிருக்கின்றன.

திரு. எஸ். வடிவேல்: பொதுக் கிணறுகளில் தண்ணீர் எடுக்க அரிசனங்கள் சிரமப்படுகிறார்கள். சமீபத்தில் மாயூரத்தில் போளத்தில் தகராறு ஏற்பட்டு போலீஸ் வந்து அரெஸ்ட் எல்லாம் செய்தார்கள். ஆகவே, தனிப்பட்ட முறையில் கிணறு கட்டிக் கொடுத்து தகராறு வராமல் தடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத் தனிப்பட்ட முறையில் கிணறு வெட்டுவது, அவர்களுக்கு உதவி செய்வது தாழ்த்தப்பட்ட நலத் துறை கவனிக்க வேண்டிய ஒன்றாகும். சமுதாயத்தில் எந்த ஒரு பகுதி மக்களும் இதுமாதிரி தடுக்கப்பட்டால் அது சமூகக் கேடு என்ற காரணத்திற்காக அதற்கான நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப்பட வேண்டியதாகும்.